# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.16/2019

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குப்பன் | மதம் | : இந்து |
| த/பெ | : மாரிமுத்து | ஜாதி | : -- |
| வயது | : 56 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**06.03.2026**

**பி.வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். தாவா சொத்தின் புல எண், நான்கு எல்லை தெரியுமா என்றால் தெரியாது. எனது வீடு தண்டுமாரியம்மன் கோவில் தெருவில் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து பஜனை கோவில் தெருவில் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு அருகில் என் வீடு உள்ளது என்று என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் அது அடுத்த தெருதான். வெங்கடேசன் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் வீட்டிற்காக போட்டுள்ளதாக சொன்னார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் தனியாக மின் இணைப்பு உள்ளதாக கூறியிருப்பதில் அந்த மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. தினகரன் புதிய வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் ஆமாம். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. பிரதிவாதி தினகரன் அழைத்துதான் நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால்

ஆமாம். எனக்கு வழக்கு சொத்தின் விவரம் தெரியாது என்றாலும் நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பணம் பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)